මධ්‍යම පළාත් සභාවේ රාජ්‍ය සේවා කොමිෂන් සභාව
மத்திய மாகாண சபையின் அரச சேவைகள் ஆணைக்குழு
**Public Service Commission of Central Provincial Council**

අංක 244, කටුගස්තොටපාර, මහනුවර
இல. 244,கடுகஸ்தொட்டைவீதி,கண்டி
No. 244, Katugasthota Road, Kandy.

**web site: *www.psc.cp.gov.lk***

කාර්යාලය / காரியாலயம் / Office 081-2213097
ලේකම් / செயலாளர் / Secretary 081-2213096
සහකාරලේකම් / உதவிசெயலாளர் / Asst. Secretary 081-2213097
ෆැක්ස් / பெக்ஸ் / Fax 081-2213096, 081-2213082


මගේඅංකය / எனது இல. / My No. CPC/PSC/06/MSO/EB/2025
ඔබේඅංකය / உமது இல / Your No.
දිනය / திகதி / Date **2025.11.**

மத்திய மாகாண சபையின்,
பிரதான செயலாளர்,
ஆளுநர் செயலாளர்,
அனைத்து அமைச்சுச் செயலாளர்கள்,
அனைத்து திணைக்கள மற்றும் நிறுவனத் தலைவர்கள் யாவருக்கும்,

**<u>மத்திய மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை தரம் II இலுள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைக்காண் தடைப்பரீட்சை -2025</u>**

மேற்குறிப்பிடப்பட்டுள்ள வினைத்திறமைக்காண் தடைப்பரீட்சையானது **<u>2025.11.23</u>** ஆம் திகதி நடைபெறவுள்ளதுடன், இப்பரீட்சைக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களில் உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களுக்கான அனுமதி அட்டை, அவர்களின் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள தொலைப்பேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (sms) ஒன்றின் மூலம் அனுப்பப்பட்டுள்ளது என்பதை இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

02. அனுமதி அட்டையின் அச்சுப் பிரதிகள் வழங்கப்படமாட்டாது என்பதுடன், குறுஞ்செய்தி (sms) மூலம் அனுப்பப்பட்டுள்ள இணைப்பினூடாக (link) அனுமதி அட்டையினை தரவிறக்கம் செய்து, அதனை <u>A4 தாளின் இருபுறமும் அமையுமாறு அச்சிடல் வேண்டும்.</u> பின்னர் அதில் விண்ணப்பதாரரின் கையொப்பமானது அவரது ஆட்சேர்ப்புக் கோவையினை பராமரிக்கும் நிறுவனத் தலைவர் அல்லது அவரினால் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரினால் அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்.

03. உரிய பரீட்சைக்கு விண்ணப்பித்து அனுமதி அட்டை கிடைக்கப் பெறாவிடின் அல்லது தங்களது அனுமதி அட்டையில் யாதேனும் பிரச்சினைகள் காணப்படின், அது தொடர்பில், 2025.11.13 ஆம் திகதியின் பின்னர் மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் பரீட்சைப் பிரிவிடம் (081-2213097) வினவுதல் வேண்டும். இப்பரீட்சைத் தொடர்பில் 2025.11.20 ஆம் திகதிக்குப் பின்னர் மேற்கொள்ளப்படும் எவ்வித கோரிக்கைகளும் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.

04. மத்திய மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை தரம் I மற்றும் III இலுள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைக்காண் தடைப்பரீட்சை டிசம்பர் மாதத்தில் நடாத்துவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

05. இது தொடர்பில் உரிய உத்தியோகத்தர்ளுக்கு அறிவிக்குமாறு மேலும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. கே.கே.ஜி.ஐ.டி.பீ. விஜேதிலக
செயலாளர்,
மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு
மத்திய மாகாண சபை